**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 26.06.2025**
**OS. No. 140/2016**
**வழக்கு சாட்சி PW.1–ராஜகோபால், த/பெ.கிருஷ்ணகவுண்டர்**

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) நீதிமன்றத்திலிருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை எதுவும் வந்ததா என்றால் இல்லை. 2ம் வாதி அழைத்தனன் பேரில் சாட்சி சொல்ல வந்துள்ளேனா என்றால் ஆமாம், நடந்த சம்பவத்தை குறித்து சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். இந்த வழக்கு ச.எண்.851/17 ல் கண்ட சொத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த ஒரு சர்வே எண்ணிற்கு தான் வழக்கு நடைபெறுகிறதா என்றால் ஆமாம். அந்த சர்வே எண்ணிலுள்ள நிலத்தின் விஸ்தீரணம் ¾ செண்ட் இருக்கும். அந்த நிலத்திற்கு தெற்கு பக்கம் 1ம் வாதியின் நிலம் உள்ளது என்றால் சரிதான். அந்த நிலத்திற்கு வடக்கு பக்கம் ராஜேஸ்வரி என்பவரின் வீடு உள்ளது. மேற்கண்ட 1ம் வாதியின் வீட்டிற்கும், சுந்தரம் என்பவரின் வீட்டிற்கும் நடுவில் சந்து உள்ளது என்றால் சரிதான், அது தான் இந்த வழக்கில் தாவா சொத்து ஆகும்.

2) சுந்தரம் என்பவரின் வீட்டிற்கும், 2ம் வாதியின் வீட்டிற்கும் எதிரே கூணாண்டியூர் செல்லும் தார் ரோடு உள்ளது என்றால் சரிதான். சுந்தரம் என்பவரின் வீட்டிற்கும், 2ம் வாதியின் வீட்டிற்கும் பின்னால் எத்தனை வீடுகள் உள்ளது என்றால் வீடுகள் எதுவும் இல்லை. சுந்தரம் என்பவரின் வீட்டிற்கும், 2ம் வாதியின் வீட்டிற்கும் வடமேற்குபுறத்தில் பிரதிவாதி ஈஸ்வரியின் வீடு உள்ளது என்றால் சரிதான். சுந்தரம் என்பவரின் வீட்டிற்கும், 2ம் வாதியின் வீட்டிற்கும் பின்னால் சுமார் 10, 15 வீடுகள் உள்ளது என்றால் சரியல்ல.

3) பிரதிவாதி ஈஸ்வரி மெயின் ரோட்டிலிருந்து மேற்கண்ட சந்தின் வழியாகத்தான் செல்லவேண்டும் என்றால் சரியல்ல. மேற்கண்ட சந்து தவிர வேறு எந்த வழியும்

பிரதிவாதிக்கு இல்லை என்றால் சரியல்ல, மேலும் மூன்று வழிகள் உள்ளது. பிரதிவாதி மேற்கண்ட சந்தின் வழியாக பிரதிவாதி செல்வதை வாதி தடுத்ததால் கருமலைக்கூடல் காவல் நிலையத்திலும், தாலுக்கா அலுவலகத்திலும் புகார் அளித்துள்ளார் என்றால் எனக்கு தெரியவில்லை. தாலுக்கா அலுவலகத்தில் பிரதிவாதி கொடுத்த மனுவின் பேரில் VAO, சர்வேயர் ஆகியோர் வந்து தாவா சொத்தை பார்வையிட்டு அளந்தார்கள் என்றால் சரியல்ல. அவ்வாறு அளந்தபோது 2ம் வாதி, அவரது மகள் ரம்யா மற்றும் அவர்களது தந்தை பச்சமுத்து ஆகியோர் தடுத்துவிட்டார்கள் என்றால் சரியல்ல.

4) அவ்வாறு பிரச்சனை செய்ததால் வருவாய் அலுவலர்கள் வாதிகளின் மீது கருமலைக்கூடல் காவல்நிலையத்தில் புகார் கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த புகாரின் அடிப்படையில் அரசு அலுவலர்களை பணி செய்யவிடாமல் தடுத்ததாக மேற்கண்ட மூவர் மீதும் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றும், அந்த வழக்கு மேட்டுர் குற்றவியல் நடுவர் எண்.2 நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்றது என்றால் எனக்கு தெரியாது. அந்த வழக்கின் முடிவில் மேற்கண்ட மூவருக்கும் தட்டணை வழங்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. எனக்கு மேற்கண்ட அனைத்து விவரங்களும் தெரியும் என்றும், வாதிகளுக்காக அதை மறைத்து பொய்யாக தெரியாது என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதிகள் தாவா சொத்தை பொறுத்து ஆவணங்கள் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்களா என்ற விவரம் எனக்கு தெரிவித்தார்களா என்றால் தாக்கல் செய்துள்ளதாக தெரிவித்தார்கள். எனக்கு எந்த விவரமும் தெரியாது என்றும், வாதிகள் சொல்லிக்கொடுத்ததன் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதிகள் தரப்பில் தாவா சொத்திற்கு எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.